டானா புயலால் ஒடிஸாவில் உயிரிழப்பு இல்லை: மறுசீரமைப்புப் பணிகள் தீவிரம்

புவனேசுவரம், அக். 25: ஒடிஸாவில் கரையைக் கடந்த 'டானா' புயலின் தாக்கத்தால் அங்கு உயிரிழப்போ அல்லது யாருக்கும் காயமோ ஏற்படவில்லை; இது, மாநில பாஜக அரசின் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கு கிடைத்த வெற்றி என்று முதல்வர் மோகன் சரண் மாஜீ தெரிவித்தார்.

அதேநேரம், புயலால் சாய்ந்த மரங்களை அகற்றுவது மற்றும் மின்கம்பங்களை மறுசீரமைப்பது உள்ளிட்ட பணிகள் தீவிரமாக நடைபெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வங்கக் கடலில் உருவான 'டானா' புயல், ஒடிஸாவின் கேந்திரபாரா மாவட்டத்தின் பிதர்கனிகா மற்றும் பத்ரக் மாவட்டத்தின் தாம்ரா இடையே வியாழக்கிழமை நள்ளிரவு 12 மணியளவில் கரையைக் கடக்க தொடங்கியது. அப்போது, மணிக்கு 110 கிலோ மீட்டர் வரையிலான வேகத்தில் சூறைக்காற்று வீசியது. வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியளவில் புயல் முழுமையாக கரையைக் கடந்தது.

புயலின் தாக்கத்தால் கேந்திரபாரா, பாலசோர், பத்ரக் ஆகிய மாவட்டங்களில் ஏராளமான மரங்கள்-மின்கம்பங்கள் சாய்ந்தன. அதேநேரம், வீடுகள் மற்றும் பிற உள்கட்டமைப்புகளுக்கு பெரிய அளவில் சேதம் ஏற்படவில்லை. பத்ரக்கில் உள்ள சந்தாபாலி பகுதியில் அதிகபட்சமாக 131 மி.மீ. அளவுக்கு மழை பெய்தது.

இந்நிலையில், புயல் நிலவரம் குறித்து முதல்வர் மோகன் சரண் மாஜி வெள்ளிக்கிழமை காலை ஆலோசனை மேற்கொண்டார். 'முன்னெச்சரிக்கையாக சுமார் 6 லட்சம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டதால் உயிரிழப்பு தவிர்க்கப்பட்டது; கடவுள் ஜகந்நாதர் மற்றும் அனைவரின் ஒத்துழைப்புடன் மனித உயிர்களைக் காக்கும் பணியில் மாநில அரசு வெற்றி கண்டுள்ளது' என்று முதல்வர் தெரிவித்தார்.

'டானா' புயல் கரையைக் கடந்த பின்னர் பெய்த கன மழை காரணமாக மேற்குவங்க மாநிலம் கொல்கத்தாவில் வெள்ளக்காடான பிரதான சாலையில் மிதந்து செல்லும் வாகனங்கள்.

பல்வேறு மாவட்டங்களில் மீட்கப்பட்ட 4,431 கர்ப்பிணிகள், ஆரம்ப சுகாதார நிலையங்களில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் 1,600 பேருக்கு குழந்தை பிறந்ததாகவும், தாய்மார்கள்-குழந்தைகள் நலமாக இருப்பதாகவும் முதல்வர் மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

புயல் கரையை கடந்ததைத் தொடர்ந்து, ரயில், விமானப் போக்குவரத்து சீரடைந்தது.

மேற்கு வங்கத்தில் இருவர் உயிரிழப்பு

கொல்கத்தா, அக். 25: டானா புயலின் தாக்கத்தால், மேற்கு வங்கத்தின் தெற்கு பகுதிகளில் கனமழை கொட்டித் தீர்த்தது. இதில் இருவர் உயிரிழந்தனர். தலைநகர் கொல்கத்தாவில் கனமழையால் தாழ்வான பகுதிகளில் மழைநீர் சூழ்ந்தது.

மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் சுமார் 2.16 லட்சம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டதாகவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை விரைந்து வழங்க உத்தரவிட்டுள்ளதாகவும் முதல்வர் மம்தா பானர்ஜி தெரிவித்தார். வியாழக்கிழமை இரவு முழுவதும் தலைமைச் செயலகத்தில் தங்கி புயல் பாதிப்பு கண்காணிப்பு பணியில் முதல்வர் மம்தா பானர்ஜி ஈடுபட்டார்.

பதவியேற்பு!

ஹரியாணா மாநிலம் சண்டீகரில் எம்எல்ஏ-வாக வெள்ளிக்கிழமை பதவியேற்ற மல்யுத்த வீராங்கனை வினேஷ் போகாட்.

வேலைவாய்ப்பு உருவாக்கம் உலகளாவிய தேவை

வாஷிங்டன், அக். 25: புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவது என்பது உலகளாவிய முக்கியத் தேவையாக உள்ளது என்று மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

அமெரிக்காவின் வாஷிங்டன் நகரில் உலக வங்கி சார்பில் நடைபெற்ற சர்வதேச பொருளாதார சூழல் மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கம் குறித்த நிகழ்ச்சியில் பங்கேற்ற அவர் பேசியதாவது:

இப்போதைய வேலைவாய்ப்புச் சந்தையில் வாய்ப்புகளைப் பெற இளைஞர்கள் என்ன மாதிரியான திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதைக் கண்டறிய வேண்டியுள்ளது. வேகமாக மாறிவரும் பொருளாதாரச் சூழல், தொழில் நுட்ப வளர்ச்சி ஆகியவை இளைஞர்கள் நல்ல வேலை வாய்ப்பு பெறுவதற்கான திறமைகளின் அளவுகோலை மாற்றி அமைத்து வருகிறது. புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவது என்பது உலகளாவிய முக்கியத் தேவையாகவும் உள்ளது.

இதற்கு முன்பு உலக வங்கி பல்வேறு துறைகளை ஆய்வு செய்து அறிக்கையாக வெளியிட்டுள்ளது. தொடர்ந்து பல்வேறு நாடுகளுடன் இணைந்து வேலைவாய்ப்பு சார்ந்த ஆய்வுகளை உலக வங்கி நடத்த வேண்டும்.

இதன்மூலம் இளைஞர்கள் தேவைக்கு ஏற்ப திறமைகளை வளர்த்துக் கொள்ள முடியும். புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படுவதுடன், வேலை இழப்புகளைக் குறைப்பதும் அவசியமாக உள்ளது என்றார்.

சர்வதேச நிதியம் (ஐஎம்எஃப்), உலக வங்கி ஆகியவற்றின் ஆண்டுக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக நிர்மலா சீதாராமன், வாஷிங்டன் நகருக்கு வந்துள்ளார். இதே நிகழ்ச்சியில் பங்கேற்க வந்துள்ள பிரிட்டன் நிதியமைச்சர் ரேச்சல் ரீவீஸை அவர் சந்தித்துப் பேசினார்.

லண்டனில் அடுத்த ஆண்டு தொடக்கத்தில் நடைபெறவுள்ள இந்தியா-பிரிட்டன் பொருளாதாரம், நிதி சார்ந்த பேச்சுவார்த்தையில் விவாதிக்கப்பட வேண்டிய விஷயங்கள் குறித்து இரு அமைச்சர்களும் ஆலோசித்தனர். அடுத்த வாரம் தனது முதல் பட்ஜெட்டை தாக்கல் செய்யவுள்ள ரேச்சலுக்கு நிர்மலா சீதாராமன் வாழ்த்து தெரிவித்தார்.

காஷ்மீர்: பயங்கரவாதத்தை முறியடிப்பதில் முழு கவனம்

வடக்கு ராணுவ துணைத் தளபதி

உத்தம்பூர், அக்.25: காஷ்மீரில் பயங்கரவாதத்தை ஒழிப்பதில் முழு கவனம் செலுத்தப்படுவதாக வடக்கு ராணுவ துணைத் தளபதி எம்.வி. சுசீந்திர குமார் வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

குல்மார்க் பகுதியில் கடந்த வியாழக்கிழமை ராணுவ வாகனத்தின் மீது பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 2 ராணுவ வீரர்கள் உள்பட 4 பேர் உயிரிழந்தனர்.

இதையடுத்து, எல்லை கட்டுப்பாட்டு கோடு (எல்ஒசி) அருகே ஆளில்லா விமானங்கள் (ட்ரோன்கள்), ஹெலிகாப்டர்கள் மூலம் பயங்கரவாதிகளை தேடும் பணியில் பாதுகாப்பு படையினர் தீவிரமாக ஈடுபட்டனர்.

இந்நிலையில், ஸ்ரீநகரில் பயங்கரவாதத்தை ஒடுக்குவது தொடர்பாக நடைபெற்ற ஆலோசனை குறித்து சுசீந்திர குமார் கூறியதாவது:

ஸ்ரீநகரில் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கான கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது. குடிமக்கள் மற்றும் ராணுவ வீரர்களுக்கு இடையேயான நட்புறவை வலுப்படுத்துவதே இந்தக் கொள்கையின் முக்கிய நோக்கமாகும். குறிப்பாக இளைஞர்களிடம் தேசியவாத கருத்துகளை எடுத்துரைக்க வேண்டும். காஷ்மீரில் நடைபெறும் தொடர் வன்முறையை ஒடுக்கி பயங்கரவாத கட்டமைப்பை ஒழிப்பதில் முழு கவனம் செலுத்தப்படவுள்ளது.

720 பயங்கரவாதிகள் உயிரிழப்பு: பாதுகாப்புப் படையினர் தொடர்ந்து நடத்தி வரும் அதிரடி நடவடிக்கைகளால் கடந்த 5 ஆண்டுகளில் 720 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர். மீதமுள்ள பயங்கரவாதிகளின் எண்ணிக்கை 120 முதல் 130 வரை இருக்கலாம் என பல்வேறு பாதுகாப்பு முகமைகள் தெரிவித்துள்ளன. தற்போது பயங்கரவாத அமைப்புகளுக்கு ஆள்சேர்க்கும் நடவடிக்கை மிகவும் குறைந்துள்ளது.

பாதுகாப்பில் பல்வேறு அமைப்புகள்: ஜம்மு-காஷ்மீரில் பாதுகாப்பை மேம்படுத்த ராணுவத்துடன் இணைந்து உள்ளூர் நிர்வாகம், காவல் துறை, மத்திய ஆயுதக் காவல் படை (சிஆர்பிஎஃப்), புலனாய்வு அமைப்புகள், கிராம பாதுகாப்பு குழுக்கள் செயல்படுகின்றன. மொத்தம் 600-க்கும் மேற்பட்ட கிராம பாதுகாப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ள நிலையில் அவற்றுக்கு 10,000 நவீன ஆயுதங்கள் வழங்கப்பட்டு பயிற்சியளிக்கப்பட்டுள்ளன.

எம்.வி. சுசீந்திர குமார்

சூழல் கட்டுக்குள் உள்ளது: கதுவா, சம்பா ஆகிய பகுதிகளில் தொடங்கி பூஞ்ச், ரஜௌரி மற்றும் ரியாசி கிஷ்துவார், தோடாவில் கடந்த 15 ஆண்டுகளாக அமைதி நிலவி வந்தது. இங்கு சுமார் 210 கி.மீ. வரை சர்வதேச எல்லை மற்றும் எல்ஏசி அமைந்துள்ளதால் பாதுகாப்பை வலுப்படுத்துவது பெரும் சவாலாக உள்ளது. இந்தப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சிப் பணிகளை தடுக்க பயங்கரவாதிகள் முயற்சிக்கின்றனர். ஆனால் ராணுவத்தின் எதிர் தாக்குதல்களால் நிலைமை கட்டுக்குள் உள்ளது என உறுதியாக கூறுகிறேன் என்றார். முன்னதாக, காஷ்மீரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் மருத்துவர், 6 வெளிமாநிலத் தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

எதனால் தாக்குதல்?

எல்லைக் கட்டுப்பாட்டு கோடு அருகே பயங்கரவாதிகள் ஊடுருவ மேற்கொள்ளப்படும் முயற்சிகள் பெருமளவில் தடுக்கப்பட்டுள்ளன. ராணுவத்தின் இந்த வெற்றியை சகித்துக் கொள்ள முடியாமல் அவர்கள் பொதுமக்களை அச்சுறுத்த முயன்று வருகின்றனர். ஆனால் அவற்றையும் ராணுவம் முறியடித்து அமைதியை நிலைநாட்டி வருகிறது என்றுவடக்கு ராணுவ துணைத் தளபதி எம்.வி. சுசீந்திர குமார்.

OMKARA ASSETS RECONSTRUCTION PVT LTD

ஓம்காரா அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிட்டெட்
CIN : U67100TZ2014PTC020363
பெருநிறுவன அலுவலகம் – கோஹினூர் ஸ்கொயர், 47 வது தளம், N.C. கேல்கர் மார்க், R.G. கட்காரி சௌக், தாதர் (மேற்கு), மும்பை – 400028.
மின்னஞ்சல் : karthi.govindasamy@omkaraarc.co தொலைபேசி எண் : 044–24323033
அதிகாரப்பூர்வ அலுவலர் – அலைபேசி – +91 9344684194 / +91 9884062068

பிற்சேர்க்கை – IV–A
(பார்க்க – விதி 8(6) – உ/ப 9(1) க்கான விதி விலக்கு)
அசையா சொத்து விற்பனை செய்யப்படுவதற்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்க சட்டம் 2002 ("சர்ஃபாசி சட்டம்") மற்றும் பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) – உ/ப – 9(1) க்கான விதி விலக்கு – ன் கீழ் அசையா சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் பொது மக்களுக்கும் குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமின்தாரர்(கள்) & அடமானதாரர்(களுக்கும்) அறிவிக்கப்படுவது யாதெனில், இதன் கீழ் விவரிக்கப்பட்ட ஜாமின் பெற்று கடனளித்தவருக்கு அடமானம் / கடன் பொறாப்பு ஏற்படுத்தப்பட்ட அசையா சொத்து, ஓம்காரா அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிட்டெட் (OARPL) ன் அதிகாரப்பூர்வ அலுவலரால் சுவாதீனம் எடுக்கப்பட்டுள்ளது. மேலும், ஓம்காரா PS 22/2020–21 ட்ரஸ்ட் – ன் அறங்காவலர் என்ற தகுதியில் செயல்படும் ஓம்காரா அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிட்டெட் (OARPL) ஆனது, 26.02.2021 தேதிய பணி ஒப்படைவு ஒப்பந்தத்தின் கீழ், ஃபுல்லர்டோன் இந்தியா கிரடிட் கம்பெனி லிமிட்டெட் (பணி ஒப்படைப்பவர்) யிடமிருந்து இதன் கீழ்க்கண்ட ஜாமின் சொத்துக்களுடன் சேர்த்து இதன் கீழ்க்கண்ட கணக்குகளில் உள்ள மொத்த நிலுவைத்தொகைகளையும் அடைந்துள்ளது. அதனால், OARPL ஆனது பணி ஒப்படைப்பவரின் நிலையினை பெற்று, நிலுவைத்தொகைகளை வசூலிக்கவும், பிணைக்காப்பு அமலாக்கம் செய்யவும் அதிகாரம் பெற்றுள்ளது. OARPL ன் அதிகாரப்பூர்வ அலுவலர் நிலுவைத்தொகைகளை வசூலிப்பதற்காக, இதன் கீழ்க்குறிப்பிட்ட ஜாமின் சொத்துக்களை விற்பனை செய்ய இதன் மூலம் உத்தேசித்துள்ளார்., அதனால் ஜாமின் சொத்துக்களை வாங்குவதற்கான விலைப்புள்ளிகள் / விலைகோரல்களை மூடி முத்திரையிட்ட உறையிலிட்டு வரவேற்கப்படுகின்றன. இதன் கீழ்க்கண்ட அந்தந்த காலத்தில் காண்பிக்கப்பட்டுள்ள ஜாமின் பெற்று கடனளித்த OARPL க்கு அந்தந்த கடன்தாரர் மற்றும் கூட்டு கடன்தாரர்(களிடமிருந்து) நிலுவையாக உள்ள தொகைகளை வசூலிப்பதற்காக, இதில் குறிப்பிடப்பட்டுள்ள அடையாள சுவாதீனத்திலுள்ள சொத்துக்கள் சர்ஃபாசி சட்டம் 13(2) மற்றும் (4) ன் கீழான ஏற்பாடுகளின் கீழான அதிகாரத்தையும், உரிமைகளையும் செயலுறுத்தி "இருக்கின்ற இடத்தில்" "இருக்கின்ற நிலையில்" மற்றும் "இருக்கின்றவற்றுடன்" மற்றும் "திரும்ப பெறத்தகாத வகையில்" என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும். கடன்தாரர்(கள்) / ஜாமின்தாரர்கள் / அடமானதாரர்கள், நிலுவைத்தொகைகளை, பிரிவு 13(2) ன் கீழ் கோரிக்கை அறிவிப்பு அனுப்பிய தேதி, அடிப்படை விலை, விலைப்புள்ளி அதிகரிப்பு தொகை, டேவணித்தொகை, ஆய்வு தேதி மற்றும் நேரம் ஆகியன இதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள் பெயர் : M/s. டரிஸ்ஸல் ஏர் கன்டிஷனர்ஸ் (கடன்தாரர்) திரு J ஷாஸாத் பாஷா மற்றும் திருமதி S தமுனிசா (கூட்டு கடன்தாரர்)

ஜாமீன் சொத்து விபரங்களாவன – திரு J ஷாஸாத் பாஷா என்பவருக்கு சேலம் மேற்கு சார்பதிவகத்தின் 29.03.2012 தேதிய ஆவண எண். 1254/2012 ன் படி சொந்தமாக உள்ள சொத்து – சேலம் மாவட்டம், சேலம் மேற்கு பதிவு மாவட்டம், சேலம் மேற்கு சார் பதிவு மாவட்டம், சேலம் மாநகராட்சி, "D" டிவிஷன், 7 வது வார்டு, முள்ளுவாடி தியாகி வகையறா தெரு, தற்போதைய முள்ளுவாடி தெரு எண். 1, கிழமேல் சாலைக்கு தெற்கு புறம், பழைய T.S. எண். 1150, ரணி சர்வே செல்லிட்மெண்ட் படி, வார்டு B, ப்ளாக் எண். 25, புதிய T.S. எண். 25; கதவு எண். 16, வரி விதிப்பு எண். 2088709, தற்போதைய கதவு எண். 16, வரி விதிப்பு எண். 2088709 (புதிய எண். 2074227) ல் அமையப்பெற்ற பின்வரும் எல்லைகளுக்குக் மத்தியில் அதாவது தெற்கு – முள்ளிவாடி 1 வது தெரு, வடக்கு – நகரட்சி சந்து, கிழக்கு – ரஹமத்கான் மற்றும் வஹாஹிதாபி சொத்து மற்றும் மேற்கு – சுந்தரம் சொத்து., என்ற எல்லைகளுக்கு மத்தியில் முள்ளிளிவாடி 1 வது தெருவுக்கு தெற்கு புறமாக உள்ள 1 வது தாக்கு சொத்தின் அளவீடுகளாவன – கிழமேல் வடக்கு – 14 அடி., தெற்கு – 15 அடி., தென்வடல் மேற்கு – 26–1/2 அடி., கிழக்கு – 27 அடி., என மொத்தம் 388 சதுர அடி பரப்பளவு கொண்ட இடம் – 1 வது இனம்.
1 வது தாக்கு சொத்துக்கு தெற்கு புறமாக உள்ள 2 வது தாக்கு சொத்தின் அளவீடுகளாவன – கிழமேல் – 13 அடி., தென்வடல் – 7–1/2 அடி., என மொத்தம் 97 சதுர அடி., என மொத்தம் 485 சதுர அடி (45.06 சதுர மீட்டர்) பரப்பளவு கொண்ட இடம் மற்றும் ஓட்டுவில்லை வீடு, மின் இணைப்பு எண். 410–001–467 மற்றும் மின் வாரிய வைப்புத்தொகை, மாநகராட்சி தண்ணீர் இணைப்பு மற்றும் அனைத்து இதர வழி வசதி உரிமைகள் மற்றும் பாதை உரிமைகள் ஆகியன.

சொத்தின் உரிமையாளர்	திரு J ஷாஸாத் பாஷா, த/பெ திரு ஜானி பாஷா
கோரிக்கை அறிவிப்பு தேதி	22 செப்டம்பர் 2021
இயற்கவாதீன தேதி	18 ஜூன் 2024
அடிப்படை விலை	(இலட்சங்களில்) – ரூ. 27,00,000/– (ரூபாய். இருபத்து ஏழு இலட்சம் மட்டும்)
டேவணித்தொகை	ரூ. 2,70,000/– (ரூபாய். இரண்டு இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்)
விலைப்புள்ளி அதிகரிப்பு தொகை	ரூ. 10,000/– (ரூபாய். பத்தாயிரம் மட்டும்)
சொத்து ஆய்வு தேதி & நேரம்	அதிகாரப்பூர்வ அலுவலரிடம் அலைபேசி எண். 9344684194 ல் முன் அனுமதி பெற்றுக்கொண்டு.
24.10.2024 ம் தேதியின் படி மொத்த நிலுவைத்தொகை	ரூ. 64,54,711/– (ரூபாய். அறுபத்து நான்கு இலட்சத்து ஐம்பத்து நான்காயிரத்து எழுநூற்று பதினொன்று மட்டும்)
கணக்கு விபரங்கள்	கணக்கு எண். 344905000929, பயனாளி பெயர் – Omkara PS22/ 2020–21 Trust, வங்கி பெயர் – ICICI Bank, கிளை – பந்தரா (E) மும்பை IFSC Code – ICIC0003449
மின்னணு ஏல தேதி & நேரம்	2024 டிசம்பர் 04 (புதன் கிழமை) பகல் 01.00 மணி முதல் பிற்பகல் 02.00 மணி வரை
விலைப்புள்ளியில் பங்கேற்பதற்கான கடைசி சமர்ப்பிக்க கடைசி தேதி மற்றும் நேரம் KYC ஆவணம் / EMD க்கான சான்று	2024 டிசம்பர் 02 (திங்கட்கிழமை) மாலை 04.00 மணி அல்லது முன்பு

ஏலத்துக்கான விதிகள் மற்றும் நிபந்தனைகள் – விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு OARPL ன் வலைதளம் http://omkaraarc.com/auction.php அல்லது சேவைதாரரின் வலைதளம் https://www.bankeauctions.com ல் கொடுக்கப்பட்டுள்ள தொடர்பை துவங்கு கூர்ந்து பார்வையிடவும்.

பிணைக்காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) – உ/ப – 9(1) ன் கீழ் விற்பனைக்கான சட்டபூர்வ அறிவிப்பு

இவ்வறிவிப்பானது, மேற்சொன்ன கடன் கணக்குக்கான கடன்தாரர்(களுக்கு) பிணைக்காப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு, பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) சட்டம் 2002 ன் கீழான ஏற்பாடுகள் மற்றும் பிணைக்காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) உ/ப – 9(1) ன் கீழ், மின்னணு ஏலம் மூலம் மேற்குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்திற்குள் அவரவர்களால் விரும்பப்படும் பட்சத்தில், இதன் மேற்குறிப்பிட்ட நிலுவைத்தொகையை 25.10.2024 முதல் மேற்கொண்டு வரும் வட்டி மற்றும் அனைத்து செலவுகள் மற்றும் கட்டணங்களுடன் திருப்பி செலுத்தி, சொத்துக்களை மீட்டுக்கொள்ளும் அறிவுறுத்தலுடன் (அவ்வாறு திருப்பி செலுத்த தவறும் பட்சத்தில்) நடத்தப்படும் ஏலம் / விற்பனை மூலம், அதிகாரப்பூர்வ அலுவலர் / ஜாமின் பெற்று கடனளித்தவரின் அதிகார வரம்பில் பிணைக்காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(5) ல் பரிந்துரைக்கப்பட்ட ஏதேனும் முறையில் சொத்து விற்பனை செய்யப்படும் என்பதை தெரிவித்து வழங்கப்படும் (30) முப்பது நாட்களுக்கு குறைவிலாது வழங்கப்பட வேண்டிய கட்டாய அறிவிப்பாகும்.

(கார்த்தி கோவிந்தசாமி)
அலைபேசி எண். 9344684194
அதிகாரப்பூர்வ அலுவலர்
ஓம்காரா அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிட்டெட்.
ஓம்காரா PS 22/2020–21 ட்ரஸ்ட் – ன் அறங்காவலர் என்ற தகுதியில் செயல்படும்

தேதி : 26.10.2024
இடம் : சென்னை

SOUTH INDIAN Bank
Experience Next Generation Banking

பிராந்திய அலுவலகம்: கோயம்புத்தூர். PB No. 3868, 1084/1-5, திருச்சி ரோடு, சுங்கம், கோயம்புத்தூர்-18, தமிழ்நாடு.
இமெயில்: ro1002@sib.co.in, Tel: 0422 2303618,
Website: southindianbank.com, CIN: L65191KL1929PLC001017

கேட்பு அறிவிப்பு

நிதிச்சொத்துக்களின் பிணையம் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பிணையநல அமலாக்க விதி, 2002, 13(2)-ன் கீழ் அறிவிப்பு.
(பிணையநல (அமலாக்க) விதிகள், 2002ன் விதி 3(1)-ன் படி இனி "சட்டம்" r/w என்று குறிப்பிடப்படும்)

To, **கடன்தாரர்: 1) திரு. L. சுந்தர்ராஜ்.** [உரிமையாளர்-M/s. நாதன் டெக்ஸ்], 8/2, வையாபுரி முதலி தெரு, அம்மாபேட்டை, சேலம் தமிழ்நாடு-636003. **உத்திரவாதிகள்: 2) திருமதி.தேவகி பார்த்தசாரதி @ P.தேவகி,** 8/2, வையாபுரி முதலி தெரு, அம்மாபேட்டை, சேலம் தமிழ்நாடு-636003. மேலும் வசிப்பிடம்: 45/17, பழைய பிள்ளையார் கோவில் தெரு, அம்மாபேட்டை, புதுமாரியம்மன் கோயில், சேலம் தமிழ்நாடு-636003. **3) திருமதி.B.ராதாமணி,** 17B/52, ராமலிங்கசாமி தெரு, அம்மாபேட்டை, சேலம், தமிழ்நாடு-636003. மேலும் வசிப்பிடம்: 8/2, வையாபுரி முதலி தெரு, அம்மாபேட்டை, சேலம் தமிழ்நாடு-636003. **4) திருமதி.M.மாலதி @ M.மாலதி,** 8/2, வையாபுரி முதலி தெரு, அம்மாபேட்டை, சேலம் தமிழ்நாடு-636003.

உங்களில் முகவரிதாரர் எண்.1-க்குரியவர் முதன்மை கடன்தாரராகவும், உங்களில் முகவரிதாரர் எண்.2-லிருந்து எண்.4 வரையிலானோர் உத்திரவாதியாகவும் இருந்து, தி சௌத் இந்தியன் வங்கியில் லிட், இதன் பதிவு அலுவலகம், SIB ஹவுஸ், T.B. ரோடு, திருச்சூர்-1, கேரளா மற்றும் அதன் பிராந்திய அலுவலகங்களுள் ஒன்றான 1084, திருச்சி ரோடு, சுங்கம், கோயம்புத்தூர்-641018 மற்றும் அதன் கிளை அலுவலகங்களுள் ஒன்றான சேலம் மெயின், கதவு எண். 13-16, லைட் ஹவுஸ் காம்பௌண்ட், ஓமலூர் மெயின் ரோடு, சேலம், தமிழ்நாடு-636009 என்ற விலாசக் கிளையிலிருந்து தேவையான ஆவணங்களின் மூலம் 22.02.2011/ 23.11.2023/ 06.08.2018 ஆகிய தேதிகளில் CCOL-க்காக ரூ.25,00,000/- (ரூபாய் இருபத்தைந்து லட்சம் மட்டும்) மற்றும் Term Loan Machinery-க்காக ரூ.19,00,000/- (ரூபாய் பதினொன்பது லட்சம் மட்டும்) பெற்றுள்ளீர்கள். மேலும் இக்கடன்களுக்காக, அட்டவணையில் கண்ட சொத்துகள் பிணையப்படுத்தப்பட்டுள்ளது. (இனி பிணையச் சொத்துகள் என குறிப்பிடப்படும்).

தங்களுக்கு வழங்கப்பட்ட இக்கடன் தொகைகள் 25.08.2024-ன்படி எமது வங்கிக் கணக்கில் 'வராக்கடன்' பிரிவில் சேர்க்கப்பட்டுவிட்டது. வங்கியானது சட்டப் பிரிவு 13(2)-ன்கீழ் 25.09.2024 அன்று வழங்கிய அறிவிப்பில், 24.09.2024 தேதிப்படி நிலுவைத் தொகை ரூ.32,97,291.19 (ரூபாய் முப்பத்திரண்டு லட்சத்து தொன்னூற்றி ஏழாயிரத்து இருநூற்றி தொன்னூற்றி ஒன்று மற்றும் பைசா பத்தொன்பது மட்டும்) பின்வட்டி மற்றும் செலவுகளுடன் அறிவிப்பு பெற்ற 60 நாட்களுக்குள் திரும்பச் செலுத்தும்படி கோரப்பட்டிருந்தது. இருப்பினும் உங்களில் முகவரிதாரர் எண். 3-க்குரியவர்கள் எமது அறிவிப்பினை தவிர்த்து/திருப்பி அனுப்பி விட்டதால் பிணையநல (அமலாக்க) விதிகள் 2002-ன் விதி 3(1)ன்படி இந்தப் பொது அறிவிப்பு வழங்கப்படுகிறது.

ஆகையால் தங்களது சகல பாக்கிகளையும் இந்த அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் கடன்களை முழுமையாகத் தீர்க்காத பட்சத்தில், தங்களுக்கு மேலும் முன்னறிவிப்பு ஏதுமின்றி இந்தச் சட்டத்தின் விதிகளின்படி தங்களுடைய பிணையச் சொத்தின் மூலமாக, சட்டவிதி 13(4)-ன் கீழ் ஏதேனும் ஒன்று அல்லது அனைத்து உரிமைகளையும் பயன்படுத்தி நடவடிக்கை எடுக்க நேரிடும்.

மேற்கூறிய பத்திரங்களை அப்புறப்படுத்தல் அல்லது கையாளுதல் அல்லது விற்பனை மூலம் மாற்றுதல், குத்தகை அல்லது வேறு விதத்திலோ (சாதாரண வணிகம் தவிர) எழுத்துப்பூர்வ முன் அனுமதியின்றி பிணையச் சொத்துகளை பரிமாற்றம் செய்வதில் இருந்து தங்களுக்கு சட்டபிரிவு 13(13)-ன்படி கட்டுப்பாடு / தடை விதிக்கப்பட்டுள்ளது என்பதையும் அறியவும். சட்டப்படி கடன்தாரர் மற்றும் உத்தரவாதிகளுக்கு எதிராக தி சௌத் இந்தியன் வங்கி லிட்-க்கு கிடைக்கும் உரிமைகள் மற்றும் பரிகாரங்களுக்கு பாரபட்சமின்றி இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது என்பதை நினைவில் கொள்ளவும்.

பிணையச் சொத்துகளை மீட்பதற்கான கால அவகாசம் தொடர்பாக சட்டப்பிரிவு 13-ன் உட்பிரிவு (8)-ன் விதிகளுக்கு கடன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

பிணையச்சொத்துக்களின் அட்டவணை

அட்டவணை "A" (CCOL கணக்கில் பிணையப்படுத்தப்பட்டுள்ள அசையும் சொத்துகள்)

அசையும் சொத்துகளின் விபரம்: M/s. நாதன் டெக்ஸ்-ன் தற்போதிருக்கும் மொத்த சொத்துகளின் அடமானம் (தற்போதும் மற்றும் இனிமேலும்), விற்பனையிலுள்ள இருப்பு, மூலப்பொருட்களின் இருப்பு, நடைமுறையிலுள்ள இருப்பு, நிறைவடைந்த சரக்குகள், பேக்கிங் பொருட்கள், கடன்தாரரின் பொருட்கள், தற்போதும் மற்றும் இனியும் எழக்கூடிய உரிமைக் கோரல்கள் மற்றும் எதிர்காலத்தில் இருப்பாக அல்லது இருப்பிற்கு வரக்கூடிய பிற அசையும் சொத்து, புத்தகக் கடன்கள், வரவேண்டிய நிலுவைத் தொகைகள், பிணையத்தின் போது அவ்வப்போது இருக்கும் பிற கோரிக்கைகள், சேமித்து வைக்கப்படும் அல்லது உள்ளே கொண்டுவரப்படும் அல்லது அவைகளின் வளாகத்தில் அல்லது குடோன்(களில்) அல்லது அருகிலோ அல்லது போக்குவரத்தில் இருக்கும் ஒரு குடோனிலிருந்து மற்றொரு குடோனுக்கோ அல்லது ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கோ அல்லது வேறு எங்கு வேண்டுமானாலும் இருக்கக்கூடிய அனைத்து அசையும் சொத்துகள். பிணையநலன் ஏற்படுத்தியவர்: திரு. L. சுந்தர்ராஜ் [உரிமையாளர்-M/s. நாதன் டெக்ஸ்].

(TERM LOAN-MACHINERY கணக்கில் பிணையப்படுத்தப்பட்டுள்ள அசையும் சொத்துகள்)

அசையும் சொத்துகளின் விபரம்: [2 nos of 2"1-54" four box under pic loom, 12 nos of 40-Koi Dobby 12 nos of Motor, Term Loan மெஷினரியை பயன்படுத்தி உதிரிபாகங்கள் மற்றும் பிற அனைத்து இயந்திரங்கள்/துணைப்பொருட்கள் ஆகியவற்றின் அடமானம். பிணையநலன் ஏற்படுத்தியவர்: திரு. L. சுந்தர்ராஜ். [உரிமையாளர்-M/s. நாதன் டெக்ஸ்].

அட்டவணை "B" (க